DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : CC No. 1/2022
Deposition of Witness for : PW 2

| Name. | திரு. சதீஷ் |
|---|---|
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 01.08.2026

**எதிரிகள் ஆஜர்.**

## முதல் விசாரணை

1. நான் புளியரண்கோட்டையில் வசித்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தகப்பனார். 24.04.2016 அன்று காலை 08.30 மணியளவில் எங்களுடைய பட்டா நிலமான புல எண் 66/3 B ல் விவசாயம் செய்து கொண்டிருந்தோம். அப்போது நடராஜன், அருள்குமார், செந்தில்குமார், நாகலட்சுமி மற்றும் பாலாஜி ஆகிய ஐந்து நபர்களும் எங்கள் நிலத்தில் அத்து மீறி நுழைந்து, அதில் நடராஜன் எங்கள் மோட்டாருக்கு செல்லும் மின் இணைப்பை துண்டித்தார்.

2. அதற்கு ஏன் அவ்வாறு செய்கிறீர்கள் என்று என் தகப்பனார் கேட்டதற்கு அந்த ஐந்து நபர்களும் எங்களை தாக்க வந்தார்கள். என் தகப்பனாரின் இடது கையை அருள்குமாரும், வலது கையை பாலாஜியும் பிடித்து கொண்டு நகர விடாமல் இருந்தனர். அப்போது நடராஜன் கையில் வைத்திருந்த சவுக்கு தடியால் என் தகப்பனாரின் வலது பக்க மண்டையில் "இன்றோடு ஒழிந்து போடா" என்று கூறி தாக்கினார்.

3. என் தகப்பனார் அவர்களிடம் இருந்து தப்பிக்க முயலும் போது நடராஜனின் சவுக்கு தடி என் தகப்பனாரின் வலது கையின் சுண்டுவிரலில் பட்டு காயம் ஏற்பட்டது. அதன் பின்பு கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து என்

தகப்பனாரின் இடது பக்க மார்பில் நடராஜன் அடித்தார். மருத்துவமனையில் என் தகப்பனாரின் ஆறாவது விலா எலும்பு உடைந்து உள்ளதாக கூறினார்கள்.

4. பாலாஜி தன் கையில் வைத்திருந்த கொம்பால் என் தகப்பனாரின் நடு முதுகில் அடித்தார். நானும் என் தாயாரும் என் தகப்பனாரை காப்பாற்ற செல்லும் பொழுது, எதிரிகள் அனைவரும் கையில் வைத்திருந்த கொம்பால் எங்களையும் அடித்தார்கள். நடராஜன் என் தாயாரின் இடது கையில் சவுக்கு தடியால் அடித்தார். பாலாஜி கம்பினால் என் தாயாரின் இடது கையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். நடராஜன் என் தாயாரின் சேலையை பிடித்து இழுத்து கொம்பால் என் தாயாரின் மார்பில் அடித்தார். செந்தில்குமார் என் தாயார் முதுகில் கொம்பால் அடித்தார். செந்தில்குமார் சவுக்கு தடியால் என் இடது பக்க மண்டையில் "இதோடு ஒழிந்து போடா" என்று கூறி அடித்தார்.

5. நடராஜன் கொம்பால் என் மார்பில் அடித்தார். நாகலட்சுமி கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து, எனது வலது கையில் அடித்தார். பாலாஜி சவுக்கு தடியால் என் முதுகில் அடித்தார். எதிரிகள் எங்களை கொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் எங்களை அடிக்க வந்தார்கள். அந்த சண்டையில் என் தகப்பனாரின் ஆடைகள் மற்றும் என்னுடைய ஆடைகள் ரத்தத்தால் நனைந்து விட்டன. அந்த காயங்களுடன் நாங்கள் சித்தாமூர் காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு இருந்த ஒரே காவலர் எங்களை மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறிவிட்டார். நாங்கள் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம்.

6. அங்கு எங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. என் தாயார் சித்தாமூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தார். எங்களுக்கு அதிகமாக அடிபட்டதால் எங்களால் செல்ல இயலவில்லை. அதன் பின்பு மேல் சிகிச்சைக்காக நானும் என் தகப்பனாரும் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். அங்கு தான் என் தகப்பனாருக்கு ஆறாவது விலா எலும்பு முறிவு ஏற்பட்டதாக தெரிய வந்தது. நாங்கள் அளித்த

புகாருக்கு காவல் துறையினர் வழக்கு பதியாமல் எங்கள் மீதே வழக்கு பதிந்து விட்டார்கள். எங்களுக்கு புகார் மனு ஏற்பு ரசீது அளித்தார்கள். இந்த வழக்கில் தான் என்னுடைய வாழ்க்கையும் என் சகோதரரின் வாழ்க்கையும் முன்னேறாமல் தடைப்பட்டுவிட்டது. சம்பவத்தில் என் சகோதரர் இல்லை. ஆனால், அவரை வழக்கில் தவறாக சேர்த்துள்ளார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.